**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 253/2025 D.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுப்பிரமணியன் | க–பெ/ த–பெ | சோலையப்பன் |
| ஊர்: | : | பள்ளத்தூர் | சமயம் | |
| வயது: | : | 64/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல் எஸ்டேட் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2026**

---------------------------------------------------------------------------------------------------

<u>**14.08.2026**</u>

<u>**முதல் விசாரணை**</u>

1) 16.02.2023 ல் பழனியப்பன் என்பரிடம் இருந்து ரூ.5,00,000/– கடன் பெற்றேன், நான் சென்னை கிண்டியில் ரேஸ்கோர்சில் அப்போது பெட்டிங் தொழில் செய்து வந்தேன், அதற்காக கடன் பெற்றேன். 22.02.2023 முதல் 18.07.2024 வரை 20 தவணைகளாக அந்த கடன் தொகை மற்றும் வட்டி சேர்த்து ரூ.5,04,500/– திருப்பி செலுத்தியுள்ளேன். 2024 10 வது மாதத்தில் அங்கு ரேஸ் நடைபெறவில்லை. எனக்கு வங்கி மூலமாக பழனியப்பன் அவரது மகள் கலை மகள் மூலமாக கடன் கொடுத்தார், நான் அதை வங்கி மூலமாகவே திருப்பி செலுத்திவிட்டேன்.

2) புகார்தாரரை எனக்கு யார் என்றே தெரியாது. புகார்தாரரின் தந்தை பழனியப்பனை தெரியும். கடன் பெறும்போது அதற்கு செக்யூரிட்டிக்காக நிரப்பாத புரோநோட் மற்றும் நிரப்பாத காசோலையை கொடுத்து வைத்திருந்தேன். பணத்தை திருப்பி செலுத்திய பின்பு செக்யூரிட்டி ஆவனங்களை திருப்பி தருவதாக கூறினார் ஆனால் திருப்பி கொடுக்கவில்லை. புகார்தாரர் என் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். காசோலை தொகை கொடுக்க நான் சட்டப்படி கடமைபட்டவர் இல்லை.

**( வங்கி பரிவர்த்தனை ஆவணங்கள் தருவதற்காக எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதால் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.14 16:07:12 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.